DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.271/2025**

Prosecution **PW. 1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜகாந்தா | கிராமம் : | |
| கணவர்பெயர் : | வையாபுரி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026
எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் பிள்ளாபாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு மருமகன். எனது கணவர் 5 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு 12.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது யாரோ ஒருவர் எனது கையில் அடித்துவிட்டார். என்னை அடித்தவர் யார் என்று இருட்டாக இருந்ததால் தெரியவில்லை. நான் குளித்தலை அரசுமருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்த போது போலிசார் என்னிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து பெற்றார்கள். தற்போது என்னிடம் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.04.2021ம் தேதி இரவு 12.30 மணியளவில் ஆஜர் எதிரி கையில் சவுக்கு தடியுடன் வந்து என்னை ஆபாச வார்த்தைகளால் திட்டி தடியால்

என்னை நெற்றி, வலது மணிக்கட்டு ஆகிய இடங்களில் அடித்தும், வயிற்றில் எட்டி உதைத்தும் என்னை கிழே தள்ளினார் என்றுபோலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்பு ஆஜர் எதிரி இடுப்பில் மறைத்துவைத்திருந்த கத்தியை எடுத்துக்காட்டி என்னைக்கிருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று நிஷாவை கெடுத்து நாசம் பண்ணாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்எ ன்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனது மருமகன் என்பதாலும் அவருடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் எனது மருமகனை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 17:42:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.